பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

15 07 2024 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடியை எக்ஸ் சமூக வலைதளத்தில் பின் தொடர்பவர்கள் எண்ணிக்கை 10 கோடியைக் கடந்துள்ளது.

2. மறைந்த முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் பிறந்த தினம் தமிழகத்தில் கல்வி வளர்ச்சி நாளாக இன்று கொண்டாடப்படுகிறது.

3. காவிரியில் தமிழகத்திற்கு 8 ஆயிரம் கன அடி நீர் மட்டுமே திறக்கப்படும் என கர்நாடாக முதலமைச்சர் திரு. சித்தராமைய தெரிவித்துள்ளார்.

4. மத்திய அரசு செயல்படுத்தும் திட்டங்களின் பயன்கள் தமிழக மக்களை சென்றடையக்கூடாது என்ற உள்நோக்கத்துடன் திமுக அரசு செயல்படுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. ஜிம்பாப்வேக்கு எதிரான 5வது மற்றும் கடைசி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 42 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியை எக்ஸ் சமூக வலைதளத்தில் பின் தொடர்பவர்கள் எண்ணிக்கை 10 கோடியைக் கடந்துள்ளது.

இதன் மூலம் எக்ஸ் சமூக வலை தளத்தில் உலகிலேயே அதிக மக்கள் பின்தொடரும் தலைவர் என்ற பெருமையைப் பிரதமர் பெற்றுள்ளார்.

இந்த சாதனை மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த சமூக வலைதளத்தில் துடிப்பாக செயல்படுவதில் மகிழ்ச்சி அடைவதாகவும் எதிர்காலத்திலும் இதேபோன்ற செயல்பாடுகளை விரும்புவதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

10 கோடி பின்தொடர்பவர்களை கடந்ததற்காக பிரதமருக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் மட்டுமல்லாமல் உலக அரங்கில் திரு நரேந்திர மோடியின் புகழுக்கு இது ஒரு சான்றாக விளங்குகிறது என்று திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாட்டு மக்களை ஆன்மிகமே ஒருங்கிணைப்பதாக தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார். சென்னையில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில்

பேசிய அவர், இந்தியா ரிஷிகளாலும், முனிவர்களாலும் உருவான நாடு என்று கூறினார்.

நாட்டு மக்களையும், ஆன்மிகத்தையும் பிரிக்க இயலாது என்றும், ஆன்மிகம் தழைக்கும்போது நாடு மேலும் வலுவானதாக மாறும் என்றும் திரு. ஆர்.என். ரவி கூறினார்.

<<<<>>>>

மறைந்த முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் பிறந்த தினம் தமிழகத்தில் கல்வி வளர்ச்சி நாளாக இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று முதல் காலை உணவுத் திட்டம் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படுவதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

இதனையொட்டி திருவள்ளூர் மாவட்டம் கீழச்சேரியில் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இத்திட்டத்தை தொடங்கி வைக்க உள்ளார்.

இதன் மூலம் மூவாயிரத்து 995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளைச் சேர்ந்த 2 லட்சத்து 23 ஆயிரம் மாணவ-மாணவிகள் பயன்பெறுவார்கள் என மாநில அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

காவிரியில் தமிழகத்திற்கு 8 ஆயிரம் கன அடி நீர் மட்டுமே திறக்கப்படும் என கர்நாடாக முதலமைச்சர் திரு. சித்தராமைய தெரிவித்துள்ளார்.

தமிழகத்திற்கு 20 நாட்களுக்கு தினமும் ஒரு டி.எம்.சி. தண்ணீரை திறக்க வேண்டும் என காவிரி ஒழுங்காற்றுக் குழு பரிந்துரை செய்திருந்தது.

இதுகுறித்து விவாதிக்க கர்நாடக அரசு பெங்களூருவில் நேற்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தியது.

இக்கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு. சித்தராமையா, காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் பரிந்துரைக்கு எதிராக மேல்முறையீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கர்நாடகா அணைகளில் தற்போது 63 சதவீத தண்ணீர் மட்டுமே உள்ளதாக அவர் கூறினார்.

காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் பரிந்துரைப்படி ஒரு டி.எம்.சி. தண்ணீர் திறக்க முடியாது எனவும், தமிழகத்திற்கு 8 ஆயிரம் கன அடி நீர் மட்டுமே திறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

போதுமான அளவு மழை பெய்யாவிட்டால் தமிழகத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்படும் என்றும் திரு. சித்தராமையா தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய அரசு செயல்படுத்தும் திட்டங்களின் பயன்கள் தமிழக மக்களை சென்றடையக்கூடாது என்ற உள்நோக்கத்துடன் திமுக அரசு செயல்படுவதாக பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

திருச்சியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தில் தொடக்கத்தில் தமிழகத்தில் 43 லட்சம் விவசாயிகள் பயன் பெற்றதாகக் கூறினார்.

தற்போது 23 லட்சம் பேர் மட்டுமே பயன் பெறுவதாக அவர் தெரிவித்தார்.

எஞ்சியுள்ள விவசாயிகள் ஏன் விடுபட்டார்கள் என அவர் கேள்வி எழுப்பினார்.

விவசாயிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாமை நடத்தி இதனை மாநில அரசு சரிசெய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஒரே கூட்டணியில் உள்ள சூழலில் காவரிப் பிரச்சினை தொடர்பாக கர்நாடக முதலமைச்சர் திரு. சித்தராமையாவிடம் இதுகுறித்து திமுக அரசு ஏன் பேசவில்லை என அவர் கேள்வி எழுப்பினார்.

மத்திய அரசின் மீது குற்றம் சாட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு திமுக செயல்படுவதாக திரு. அண்ணாமலை குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

வடசென்னை பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று சென்னை சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் திரு. சேகர் பாபு தெரிவித்துள்ளார்.

வட சென்னை பகுதியில் மேற்கொள்ள வேண்டிய அடிப்படை வசதி திட்டங்கள் குறித்து நேற்று அவர் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இப்பகுதிக்கான வளர்ச்சித் திட்டங்கள் குறித்து தொடர் ஆய்வு மேற்கொள்ளப்படுவதாகக் கூறினார்.

இது தொடர்பான திட்ட அறிக்கை விரைவில் தயார் செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என்று திரு. சேகர் பாபு தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ளுமாறு மாவட்ட நிர்வாகங்களுக்கு பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அத்துறையின் இயக்குநர் திரு. செல்வவிநாயகம் மாவட்ட நிர்வாகங்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் எல்லையோர மாவட்டங்களில் டெங்கு பாதிப்பை தடுக்க கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மழை பெய்து வரும் நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

கர்நாடகாவில் டெங்கு காய்ச்சல் பரவி வரும் சூழலில் எல்லையோர மாவட்டங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு தனியார் மருத்துவமனைகளில் காய்ச்சல் கண்காணிப்பை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொசுக்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பொது சுகாதாரத்துறை இயக்குநர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

மதுரையில் ரயில் ஓட்டுநர்களுக்கான புதிய ஓய்வு விடுதி கட்டப்பட்டுள்ளது.

நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள இந்த ஓய்வு விடுதி ரயில் ஓட்டுநர்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் பசுக்களுக்கு 85 சதவீத மானியத்தில் ஆவின் மூலம் காப்பீட்டு வசதி வழங்கப்படும் என்று மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டம் கம்பத்தில் பால் உற்பத்தியாளர்களுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் பேசிய அவர், மாடு வளர்ப்போருக்கு வங்கிகள் மூலம் 9 சதவீத மானியத்தில் கடன் வழங்கப்படுவதாகத் தெரிவித்தார்.

ஆவின் மூலம் கொள்முதல் செய்யப்படும் பாலுக்கு 10 நாட்களுக்கு ஒருமுறை பணம் பட்டுவாடா செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் இருவேறு துப்பாக்கிச்சூடு சம்பவங்களில் 7 பேர் உயிரிழந்தனர். 9 பேர் காயமடைந்தனர்.

-------------

ஏமன் விமான நிலையத்தின் மீது அமெரிக்க - இங்கிலாந்து கூட்டுப் படைகள் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளன.

-------------

மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் ஒரே நாளில் 11 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டதற்காக கின்னஸ் சாதனை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

-------------

ஜம்மு-கஷ்மீரின் உதம்பூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் ஆய்வு மேற்கொண்டார்.

-------------

பாம்பன் புதிய ரயில் பாலத்தில் தூண்களில் பொருத்தப்பட்டுள்ள சென்சார் கருவிகளை கட்டுமானப் பொறியாளர் மைய விஞ்ஞானிகள் நேற்று ஆய்வு செய்தனர்.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் கோமுகி அணையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். பிரசாந்த் ஆய்வு மேற்கொண்டார்.

-------------

நீலகிரி மாவட்டம் குந்தா பகுதியில் புலியின் பற்கள் மற்றும் நகங்களை வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

-------------

சென்னையில் உள்ள பாரம்பரிய கட்டிடமான ஹுமாயூன் மஹாலில் அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளதாகவும், இதற்கு சுதந்திரப் போராட்டம் தொடர்பான வரலாற்றுப் பொருட்களை மக்கள் நன்கொடையாக வழங்கலாம் எனவும் மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஜிம்பாப்வேக்கு எதிரான 5வது மற்றும் கடைசி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 42 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஹராரேயில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 167 ரன் எடுத்தது.

168 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய ஜிம்பாப்வே 18 புள்ளி 3 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 125 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

இதன் மூலம் 4-1 என்ற கணக்கில் இந்தியா தொடரை வென்றது.

----------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திருச்சி அணி 35 ரன் வித்தியாசத்தில் சேலம் அணியை வென்றது.

இன்றைய ஆட்டத்தில் மதுரை அணி – நெல்லை அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**